**செய்தி வெளியீடு எண்:707** **நாள்: 11.09.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

**வடகிழக்கு பருவமழை குறித்த ஆயத்த பணிகள் தொடர்பாக தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.09.2021) தலைமை செயலகத்தில் சம்மந்தப்பட்ட துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

இந்த ஆய்வுக் கூட்டத்தில் பல்வேறுத் துறை செயலாளர்கள், சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்கள், இராணுவம், விமானப்படை, கப்பற்படை, கடலோர காவல் படை, இந்திய வானிலை ஆய்வு மையம், ஒன்றிய நீர்வள ஆணையம், தேசிய பேரிடர் மீட்பு படை உள்ளிட்ட ஒன்றிய அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் அவர்கள்,

- பேரிடர் காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கும் பொருட்டு, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால வெள்ளத் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், குறிப்பாக மழைநீர் வடிகால்களில் உள்ள அடைப்புகளை அகற்ற

வேண்டும்மெனவும், ஏரி மற்றும் குளங்களின் கரைகளை பலப்படுத்த வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்கள். மேலும், வடிகால்கள் மற்றும் ஏரி குளங்களை தூர்வார நிலையான வழிகாட்டு நடைமுறைகளை தயாரிக்கவும் அறிவுரை வழங்கினார்கள்.

- மேலும், பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் முன்னெச்சரிக்கை தகவல்களை வழங்கும் வகையில் அனைத்து மாநகராட்சிகளிலும், மாவட்டங்களிலும் அவசர கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் செயல்பட வேண்டும் எனவும், இந்திய வானிலை ஆய்வு மையத்தால் வெளியிடப்படும் எச்சரிக்கை செய்திகளை இந்த அவசரக் கட்டுப்பாட்டு மையங்களுக்கு அனுப்பப்படுவதை உறுதிசெய்ய வேண்டுமெனவும், அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.
- பருவமழை துவங்குவதற்கு முன்னர் பேரிடர் தொடர்பான பணிகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்க வேண்டும்மெனவும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட

வேண்டுமெனவும், பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை தகவல்களை விரைந்து அளித்திடும் வகையில் குடியிருப்போர் நலசங்களின் பட்டியல் தயாரித்து வாட்ஸ் ஆப் குழு அமைக்க வேண்டும்.

- கிராமப்புறங்களில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைளில் ஈடுபடுத்தும் பொருட்டு இளைஞர்களை கண்டறிந்து பயிற்சியளித்து, தேவையான மீட்பு உபகரண்ங்களை அவர்களுக்கு வழங்கி ஆயத்த நிலையை மேம்படுத்த வேண்டும்.
- நியாய விலை கடைகளில் அத்தியாவசிய பொருட்களின் போதுமான இருப்பு வைக்க வேண்டும்.
- அரசு சமையல் கூடங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- தேடல், மீட்பு நிவாரணப் பணிகளில், தன்னார்வலர்கள் மற்றும் இளைஞர்களை ஈடுபடுத்த வேண்டும் என்றும், பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளாகும் பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை மக்களுக்கு உடனுக்குடன் வழங்க உரிய

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்கள்.

- குறிப்பாக தொடர்புடைய துறைகள் மூலம் கீழ்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்கள்.
- பேரிடர் காலங்களில் நகரத்தில் ஏற்படும் வெள்ளத் தடுப்பு பணிகளில் குறுகிய காலங்களில் நிறைவேற்றக் கூடிய திட்டப் பணிகளான

அ) மழைநீர் வடிகால் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்யவும்,

ஆ) மிகவும் பாதிப்படைந்த பகுதிகளை சீரமைக்கும் பணிகளையும் உடனடியாக செயல்படுத்திட வேண்டும்

இ) குளங்கள் மற்றும் ஏரிகளின் கரைகளை வலுப்படுத்தவும்

ஈ) நீர் நிலைகளை தூர்வாறும் பணிகளை துரிதமாக செயல்படுத்தவும்,

இப்பணிகளை பொதுப்பணித் துறை (நீ.வ.ஆ), நகராட்சி நிர்வாகம், பெருநகர சென்னை மாநகராட்சி, பேரூராட்சி, ஊரகவளர்ச்சி துறைகள் மேற்கொள்ள வேண்டும்.

- நகரத்திலுள்ள நீர்நிலைகளை உடனுக்குடன் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு குப்பைகள் மற்றும் அடைப்புகளை சீர் செய்து குறுகிய கால தணிப்பு நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு நகரமும், நகர வெள்ள மேலாண்மை திட்டத்திற்கு நிலையான வழிமுறைகளை வகுக்க வேண்டும்.
- மேலும், வெள்ளம் ஏற்படும் பகுதிகளில் இயந்திர நீர் இறைப்பான்கள் மூலம் வெள்ள நீரை உடனுக்குடன் வெளியேற்ற தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- பொதுப்பணித் துறை உடனடியாக வல்லுநர் குழு அமைத்து நீர்நிலைகளில் நீர்மட்டத்தை கண்காணித்து தேவைப்படின் அணைகளிலிருந்து அவசரகாலத்திற்கு ஏற்ப வெள்ள நீர் வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- மழைக்காலங்களில் சாலைகளில் விழும் மரங்களை சம்மந்தப்பட்ட துறைகள் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்றும், இது தொடர்பான புகார்களை சமூக வலைதளங்கள் (WhatsApp, Twitter) மூலம் பொதுமக்கள் தெரிவிக்கலாம்.

- பொதுமக்களுக்கு பேரிடர் தொடர்பான பயிற்சி அளிக்கும் திட்டங்களை ஊக்குவிக்கவும், பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் வசிக்கும் மக்கள் கைபேசி செயலி மூலம் இணைந்து, பேரிடர் மீட்பு பணிகளை செயல்படுத்த பயிற்சி அளிக்க வேண்டும்.
- பேரிடர் காலங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஒன்றிணைத்து செயல்படுத்தவும், கிராம பஞ்சாயத்து உதவியுடன் பாதிப்புக்குள்ளாகும் பகுதியிலுள்ள மக்களை அருகிலுள்ள சமுதாய கூடங்களில் தங்க வைக்கவும், நிவாரண மையங்களில் தரமான உணவு, மருத்துவ வசதி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- மாவட்டந்தோறும், ஏற்படும் அபாயங்களினால் திப்புக்குள்ளாகும் பகுதிகளின் வரைபடம் கட்டாயம் தயார் செய்ய வேண்டும்.
- நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- களப்பணியாளர்களுக்கு உரிய பயிற்சி அளித்து வெள்ளத் தடுப்பு திட்டங்களில் அனைத்து துறைகளின் அலுவலர்களும்

ஒன்று சேர்ந்து குழுக்கள் அமைத்து வெள்ளத் தடுப்பு திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

- பாதிப்புக்குள்ளாகும் பகுதியில் உள்ள மக்களை வெளியேற்றும் போது முதியோர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் முன்னுரிமை அளித்திட, தன்னார்வலர்கள் மற்றும் மீட்பு குழுவினருக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
- பேரிடர் ஏற்படும் போது, பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளிலுள்ள கால்நடைகளை விடுபடாமல் பாதுகாப்பான தங்குமிடங்களுக்கு எடுத்துச் செல்லும் வகையிலான திட்டங்கள், பயிற்சிகளில் இடம்பெற வேண்டும்.
- மேலும், நிவாரண மையங்களில் போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஏற்படுத்திடவும், நிவாரண பொருட்களை அதிகாரிகள் மூலம் கண்காணித்து பொது மக்களுக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- ஈபரிடர் மீட்பு பணிகளில் இளைஞர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இணைந்து பணியாற்ற பயிற்சி அளிக்க வேண்டும்.
- பேரிடர் காலங்களில் நடத்தப்படும் மாதிரி பயிற்சிகளில் (Mock Drill) சமூக இடைவெளி தவறாது கடைபிடிக்க வேண்டும்.
- பேரிடர் காலங்களில் கொரோனா பரவலை தடுக்க பொதுமக்கள் குறிப்பாக அனைவரும் வெளியில் செல்லும் போதும், பொது இடத்தில் தங்க வைக்கும் போதும், பயணிக்கும் போதும் கட்டாயமாக முகக்கவசம் அணிந்து கொள்ள வேண்டும்.
- தனிமனித இடைவெளி கடைபிடிக்க வேண்டும்.
- பேரிடர் காலத்தில் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு கையேடுகள், குறும்படங்கள் மற்றும் ஒலி, ஒளி பதிவுகள் மூலம் விழிப்புணர்வுகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு நகரத்திலும் தானியங்கி வானிலை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ள நிவாரண முகாம்கள், சமூக இடைவெளியுடன் தங்க வைக்க போதுமானதாக உள்ளதா என ஆய்வு செய்து, தேவைப்படின் நிவாரண முகாம்களின் எண்ணிக்கையை அதிகபடுத்த வேண்டும்.
- வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்பு 37 மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் சென்னை மாநகரின் 15 மண்டலங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஆயத்த பணிகளை கண்காணித்து அறிக்கை அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.
- மேலும், பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை தகவல்களை பொதுமக்களுக்கு விரைந்து அளிக்க வேண்டும்.
- வடகிழக்கு பருவமழை காலத்தில் பொருட் சேதம் மற்றும் உயிர்சேதம் ஏற்படாமல் தவிர்க்கவும், குறைக்கவும் அனைத்து

துறையினைச் சார்ந்த செயலாளர்களும், துறைத் தலைவர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

- மீட்புக் குழுக்கள் குறுகிய கால அளவில் பாதிக்கப்பட்ட பகுதிகளை சென்றடைய ஏதுவாக தேவையான உபகரணங்களுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

எதிர்வரும் வடகிழக்கு பருவமழைக் காலத்தில், பேரிடர்களின் சவால்களை திறம்பட எதிர்கொள்ள அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென அறிவுரை வழங்கினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை – 9**